2003 ஏப்ரல் 28]

திரு. மு. அப்பாவு: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டே பகுதி நேர கால்நடை மருத்துவமனையும், அதேபோன்று கால்நடை மருத்துவமனை தமிழகத்தில் அமைக்கும்போது இதற்கு முன்னுரிமையும் கொடுப்பதாக வாக்குறுதி அளித்தமைக்கு என்னுடைய தொகுதி மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்து அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 347, திரு. க. பாரமலை, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

347—

தொழிற் கூடங்கள்

***6487—திரு. க. பாரமலை:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, முத்தனேந்தல் சோமசுந்தரம் நூற்பாலையின் அருகில் உள்ள சிறுதொழில் வளர்ச்சிக் கழகத்தின் (சிட்கோ) தொழிற்கூடங்கள் பல வருடங்களாகச் செயல்படாமல் இருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அத்தொழிற்கூடங்கள் இயங்க அரசின் நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ஆர். வடிவேல், ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தொழிற்பேட்டை அமைத்த பிறகு தொழில் முனைவோர் முன்வராத காரணத்தினால் அவை பயன்படுத்தப்படாமல் உள்ளன. ஆர்வமுள்ள தொழில் முனைவோர் முன்வந்தால், தொழிற்கூடங்கள் வாடகை/தவணைமுறை/மொத்த விற்பனை முறையில் ஒதுக்கீடு செய்யப்படும். அரசு நிறுவனங்கள் ஏதேனும் பயன்படுத்த முன்வந்தாலும் அவை ஒதுக்கித் தரப்படும்.

முற்பகல் 10-25

திரு. க. பாரமலை: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் தொழிற்பேட்டை எந்த ஆண்டு தொடங்கப்பட்டது? எத்தனை தொழிற்கூடங்கள் இதில் அமைக்கப்பட்டிருக்கின்றன? இதுவரை அரசு நிறுவனங்களுக்கோ அல்லது தனிப்பட்ட யாருக்காவது அவை ஒப்படைக்கப்பட்டிருக்கிறதா? சமீபத்திலே மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்த விவசாயம் சார்ந்த தொழில்கள் 50 சதவீதத்திற்கு, குறைந்த முதலீட்டில், அமைக்க முன்வருவோர்க்கு அதை ஒதுக்கீடு செய்ய அரசு பரிசீலனை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். வடிவேல்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுரை, மானாமதுரை வழித்தடத்தில், சிவகங்கை மாவட்டத்தில் திருங்காகோட்டை என்னும் இடத்தில் 1995 ஆம் வருடம் 21.85 ஏக்கர் நிலப்பரப்பில் ஒரு தொழிற்பேட்டை அமைக்கப்பட்டது. அதில் 5 தொழிற்கூடங்கள் கட்டப்பட்டன. ஆனால் இதுவரை ஆர்வமுள்ள தொழில் முனைவோர் யாரும் முன்வராத காரணத்தால் அவை காலியாக உள்ளன. ஆர்வமுள்ள தொழில் முனைவோர் முன்வந்தால் தொழிற்கூடங்கள் வாடகை/தவணை முறை/மொத்த விற்பனை முறையில் ஒதுக்கீடு செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 348, திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

348—

புதிய தொழிற்பேட்டை

***8244—திரு பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமுல்லைவாயிலில் அமைக்கப்படவிருக்கும் புதிய தொழிற்பேட்டை மூலம் எத்தனை பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்?

(ஆ) அதன் விவரம் என்ன?